TNED140007472021

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பவானி**
**முன்னிலை:–திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**
2026ம் வருடம் ஜனவரி மாதம் 03ம் நாள் சனிக்கிழமை
**MP.No.02/2025**
**IN**
**DVC 8/2021**

ரதிதேவி,
க/பெ.லோகமணி,
15/522, பாலாஜி நகர்,
ஜீவா நகர் பஸ் நிறுத்தம்,
ஊராட்சி கோட்டை கிராமம்,
பவானி வட்டம்,
ஈரோடு மாவட்டம். ... மனுதாரர்/ மனுதாரர்

/எதிர்/

1. வெங்கடாச்சலம்
2. மாரிமுத்து
3. லோகமணி
த/பெ.குருசாமி,
ஜீவா நகர் பஸ் நிறுத்தம்,
ஊராட்சி கோட்டை கிராமம்,
பவானி வட்டம்,
ஈரோடு மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரால் மனுவை திருத்தக் கோரி எதிர்மனுதாரர்கள் மீது மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. பிரமாணப்பத்திரத்தில் கண்டுள்ள காரணங்களுக்காக இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள் செய்த கொடுமைகளுக்காக ரூ.40,00,000/– (நாற்பது இலட்சம்) இழப்பீட்டுத்தொகையும் மற்றும் மாதம் ரூ.40,000/– மற்றும் 13 பவுன் நகைகள் ஆகியவை கிடைக்கப்பெற பிரிவுகள் 12, 17, 18, 19, 20, 21 ன்படி தாக்கல்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.03 07:49:11 +0530

செய்துள்ள பிரமாணப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டு இவ்வழக்கில் சேர்த்து வழக்கை தொடர்ந்து மேல் நடத்தவும் தகுந்த ஆணைகள் பிறப்பிக்க வேண்டி பணிவுடன் பிரார்த்திக்கப்படுகின்றது.

1.2 மனுவில் சேர்க்க வேண்டியதாக நகைகளை மனுவில் 7 பக்கத்தில் மேலிருந்து கீழாக 7 வது வரியில் வேண்டுமாயும் என்பதற்கு பின்னிட்டு மனுதாரர் திருமணத்தின் போது போட்ட 13 ½ பவுன் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுத்தரும்படியும், எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு கொடுமைகள் புரிந்ததின் அடிப்படையிலும், மனுதாரருக்கு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்தியதற்காகவும், குடும்ப வன்முறை குற்றங்களை புரிந்ததின் அடிப்படையிலும் மனுதாரருக்கு ரூ.40,00,000/– இழப்பீடாக வழங்க உத்திரவிட வேண்டுமாயும், மனுதாரருக்கு வேண்டிய உணவு, உடை, மருத்துவம், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்கும், குடும்ப செலவிற்கும் மாதம் ரூ.40,000/– வழங்க உத்திரவிட்டும், ஆகிய வரிகளை சேர்க்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்–</u>

மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி மனு நிலுவையில் இருந்து வருகின்றதாகவும், மனுதாரர் இம்மனு தாக்கல் செய்தபோது மனுதாரருக்கும், 3 ம் எதிர்மனுதாரருக்கும் பார்த்திபன் என்ற மகன் பிறந்து தற்போது மனுதாரரின் மகனுக்கு 21 வயது ஆகின்றது என்றும், மேற்படி 3ம் எதிர்மனுதாரரான மனுதாரின் கணவர் மனுதாரரையும் மனுதாரரின் மகனையும் சரிவர பராமரிக்காமல், மனுதாரருக்கும் மனுதாரரின் மகனுக்கும் எவ்வித செலவுகளும் செய்யாமல் இருந்து வருகின்றார் என்றும், இருப்பினும் மனுதாரர் அவருக்கு கிடைக்கும் வேலைகளை செய்து அவரது மகனை பராமரித்தும், படிக்க வைத்தும் வருவதாகவும், மேலும் மனுதாரர் மனுதாரரின் சட்ட அறியாமையின் காரணமாக மனுவில் தாங்கள் குடியிருக்கும் வீட்டில் எதிர்மனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு மட்டும் கோரியுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு கொடுமைகள் புரிந்ததின் அடிப்படையிலும், மனுதாரருக்கு உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்தியதற்காகவும்,

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.03 07:49:39 +0530

குடும்ப வன்முறை குற்றங்களை புரிந்ததின் அடிப்படையிலும் மனுதாரருக்கு ரூ.40,00,000/- இழப்பீடாக வழங்க உத்திரவிட வேண்டுமாயும், மனுதாரருக்கு வேண்டிய உணவு, உடை, மருத்துவம், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்கும், குடும்ப செலவிற்கும் மாதம் ரூ.40,000/- வழங்க உத்திரவிட்டும் அனுமதிக்க வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளதாகவும், மனுதாரருக்கு அவரது கணவரான 3ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் தர கடமைப்பட்டுள்ளார் என்றும், எனவே வழக்கில் ரூ.40,00,000/ இழப்பீடு மற்றும் குடும்ப செலவிற்கும் மாதம் ரூ.40,000/- சேர்த்துக்கொள்ள அனுமதிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளதாகவும், மனுவில்சேர்க்க வேண்டிய விவரம் மனுவில் சேர்க்க வேண்டியது என்னவென்றால், மனுவில் 7 பக்கத்தில் மேலிருந்து கீழாக 7 வது வரியில் வேண்டுமாயும் என்பதற்கு பின்னிட்டு மனுதாரர் திருமணத்தின் போது போட்ட 13 ½ பவுன் நகைகளை எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுத்தரும்படியும், எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு கொடுமைகள் புரிந்ததின் அடிப்படையிலும், மனுதாரருக்கு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்தியதற்காகவும், குடும்ப வன்முறை குற்றங்களை புரிந்ததின் அடிப்படையிலும் மனுதாரருக்கு ரூ.40,00,000/- இழப்பீடாக வழங்க உத்திரவிட வேண்டுமாயும், மனுதாரருக்கு வேண்டிய உணவு, உடை, மருத்துவம், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்கும், குடும்ப செலவிற்கும் மாதம் ரூ.40,000/- வழங்க உத்திரவிட்டும், ஆகிய வரிகளை சேர்க்க வேண்டும் என்று மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்யத எதிருரை-</u>

மனு சட்டப்படி செல்லாது என்றும், நிலைக்கக்கூடியாது இல்லை என்றும், எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிற மற்ற அனைத்து சங்கதிகளும் மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவராவார் என்றும், இந்நீதிமன்றத்தில் மனுகாரர் தாக்கல் செய்த மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் முற்றிலும் சட்டத்திற்கு புறம்பானது என்றும், மனுதாரர் ஈரோடு மாவட்ட சமூக நல அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட புகாரிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் கூறப்படாத சங்கதிகளை எந்த பிரிவுகளின் கீழ் இவ்வழக்கில் மனுவில் சேர்க்க முடியும் என்ற விளக்கம் மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுதாரர் தரப்பு முதல் விசாரணையும், அதனை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.03 07:49:43 +0530

தொடர்ந்து குறுக்கு விசாரணையும் முடிவுற்ற நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது சட்டத்தின் வரைமுறைக்கு அப்பாற்பட்டது என்றும், வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், எதிர்மனுதாரர்களை பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரர் தரப்பு மற்ற சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ள இந்நிலையில் வேறு சாட்சிகளை ஆஜர்படுத்தாமல் இழுத்தடித்து வருகிறார் என்றும், ஆகவே சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் கிருபை செய்து நீதிமன்றத்தில் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவினை, செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தனது மனுவில் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரருக்கும் 3ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் குறித்து எவ்வித முரண்பாடும் இருதரப்பினர்களுக்கு இடையே இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மனுதாரருக்கும் 3ம் எதிர்மனுதாரருக்கும், திருமணத்தின் பயனாக ஒரு குழந்தை உள்ளது என்பது இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி ஆகும். மேலும், மனுதாரர் தனது சட்ட அறியாமையின் காரணமாக மனுவில் தாங்கள் குடியிருக்கும் வீட்டில் எதிர்மனுதாரர்கள் இருந்து பாதுகாப்பு மட்டும் கூறியுள்ளேன் என்றும், எதிர்மனுதாரர்கள் எனக்கு கொடுமை புரிந்ததன் அடிப்படையில் எனக்கு உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்தியதாகவும், குடும்ப வன்முறை குற்றங்களை புரிந்ததன் அடிப்படையிலும் எனக்கு ரூ.40,00,000/-ம் இழப்பீடாக வழங்க உத்தரவேண்டுமாயும் எனக்கு வேண்டிய உணவு உடை மருத்துவ உபயோகப் பொருட்கள் குடும்ப செலவிற்கு மாதம் ரூபாய் 40 ஆயிரம் வழங்க உத்தரவிட அவசியமானது என்றும், மனுதாரர் திருமணத்தின் போது போட்ட 13 அரை பவுன் நகையும் 1ம் எதிர்மனுதாரிடம் இருந்து பெற்றுத் தர வேண்டும் என இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவிற்கு எதிரொலி தாக்கல் செய்துள்ள எதிர்மனுதாரர் இந்த மனுவில் கோரி உள்ள பரிகாரமான சட்டத்திற்கு புறம்பானது என்றும், மேற்படி ஈரோடு மாவட்ட சமூக ஆர்வலர்களும் கொடுக்கப்பட்ட

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.03 07:49:48 +0530

புகாரிலும், நீதிமன்ற முதல் விசாரணைகளும் கூறப்படாத சங்கதிகள் இந்த பிரிவின் கீழ் வழக்கில் சேர்க்க முடியும் என்ற விளக்கம் மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுதாரர் தனது முதல் விசாரணையும் அதனை தொடர்ந்து குறுக்கு விசாரணையும் முடிவுற்ற நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது சட்டத்திற்கு வரைமுறைக்கு அப்பாற்பட்டதாகவும் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிர்மனுதாரர்களை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளார் என எதிர் உரை தாக்கல் செய்துள்ளார்.

**5.** மேற்படி மனுதாரரின் பரிகாரங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர் தனக்கு இழப்பீடு மற்றும் மாதம் ரூ.40,000/- ஜீவனாம்சம் வேண்டும் எனவும் மற்றும் 13 அரை பவுன் 1ம் எதிர்மனுதாரிடமிருந்து மீட்டு தர வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்கதியை மனுதாரர் தனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றாலும் அதனை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரருக்கு உண்டு. மேலும், எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய ஒரு வாய்ப்பு உள்ளது என்பதும் நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. மேலும், இரு தரப்பிலும் திருமணம் மற்றும் குழந்தை போன்றவற்றை ஒப்புக்கொண்டுள்ளதால் கணவன் தனது மனைவியை பராமரிப்பது அவரது கடமை என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். எனவே, ஜீவனாம்சம் மற்றும் இழப்பீடு குறித்து வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்து இரு வழக்குகள் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு இந்த மனுவை அனுமதிப்பதே உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இம்மனு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.03 07:49:56 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**